<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் , திருவொற்றியூர்</u>

<u>**OS.No. 366/2007**</u>

இந்நீதிமன்றத்து மூன்றாம் நிலை எழுத்தர் திரு.சங்கர்கணேஷ், அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| தேதி | - | **29.10.2025** |
| பெயர் | - | துளசி |
| த/பெ | - | ராமச்சந்திரன் |
| தொழில் | - | தையல் தொழில் செய்து வருகிறேன் |
| ஊர் | - | காலடிப்பேட்டை, திருவொற்றியூர் |
| வயது | - | **69** |
| சாட்சி | - | PW1 |

விசாரணை தொடங்கும் நேரம் : **04.45 P.M**

குறுக்கு விசாரணை :-

1. நான் பாலகிருஷ்ண நாயுடு காலணி முதல் தெருவில் வசிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் மேற்சொன்ன முகவரியில் தான் வசித்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன முகவரியில் எந்த வருடத்தில் இருந்து வசித்து வருகிறேன் என்றால் 1984 ம்ஆண்டு முதல் வசித்து வருகிறேன். வழக்கு சொத்தின் அடிமனை சாத்தாங்காடு கிராமத்தின் சர்வே எண் 173/1 ல் 496 சதுரஅடி என்று வாதுரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் சர்வே எண்:173/1 ல் மொத்த விஸ்தீரணம் 25 ஏக்கர் 93 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. 25 ஏக்கர் 93 செண்ட்ல் எந்த பகுதியில் வழக்கு அடிமனை உள்ளது என்று அடையாளம் காட்ட நான்கு பக்கஎல்லைகள் மற்றும் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தை அடையாளம் காட்டும் விதமாக நான்கெல்லைகள் மற்றும் நான்கு பக்க அளவுகள் வாதுரையில் குறிப்பிடாத காரணத்தினால் நான் இவ்வழக்கில் கேட்கும்

பரிகாரம் கிடைக்கத்தக்கது அன்று என்று பிரதிவாதிகளின் பதிலுரையில் பத்தி 3 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. பிரதிவாதிகளின் பதிலுரையில் நான்கெல்லைகள் மற்றும் நான்கு பக்க அளவுகள் குறிப்பிடவில்லை என்று பதிலுரையில் தெரிவித்தும் வாதுரையை திருத்தம் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனக்கு அது குறித்து ஞாபகம் இல்லை.

3. யாருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் E.சுலோச்சன அம்மாள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். E.சுலோச்சன அம்மாள் அவர்களின் வீடு உள்ள அதே அடிமனையின் ஒரு பகுதியில் தான் வழக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். V.சுலோச்சனா, கணேசன், பக்தவச்சலம் ஆகியோரின் வீடுகளும் அதே மனையின் பகுதிகளில் உள்ளது என்றால் சரிதான். நான் V.சுலோச்சனா, கணேசன், பக்தவச்சலம் ஆகியோர் முதல் பிரதிவாதி சுலோச்சனாவிற்கு எதிராக நிரந்தர தடை உத்தரவு கேட்டு பொன்னேரி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.264/1992 தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் சுலோச்சனா அம்மாள் மொத்த அடிமனைக்கும் பட்டா தன்பெயரில் உள்ளது என்று எதிர் வாதம் செய்தார்கள் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது.

4. நாங்கள் தாக்கல் செய்த மேற்சொன்ன வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு வழக்கு எண் 484/1997 என மாற்றப்பட்டது என்றால் சரிதான். வாதிகள் வராத காரணத்தினால் மேற்கண்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் வழக்கை கோப்பிற்கு கொண்டு வர மனுதாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மனு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். நிரந்தர தடை உத்தரவு கேட்ட முன்வழக்கு நிலுவையில் இருக்கும் போது 2007 ம் ஆண்டு அதே பரிகாரம் கோரி மீண்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு காரணம் என்ன என்றால் எனக்கு அது குறித்து தெரியாது.

5. E.சுலோச்சனா அம்மாள் அவர்களின் தாயார் பெயர் பட்டம்மாள் என்றால் சரியல்ல அவர்களின் பெயர் கமலம்மாள். பட்டம்மாள் என்பவர் சுலோச்சனா அம்மாள் அவர்களின் அத்தை என்றால் எனக்கு தெரியாது. E.சுலோச்சனா அவர்களின் கணவரின் சகோதரி பட்டம்மாள் மற்றும் இவ்வழக்கின் பிரதிவாதிகள் 2 முதல் 5 ஆகியோர் V.சுலோச்சனா,

பக்தவசலம், கணேசன் மற்றும் துளசி ஆகிய நால்வருக்கு எதிராக சுவாதீனம் பெற பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் எண்.104/1998 என்ற வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும்.

6. வழக்கு எண். 104/1998 அந்த வழக்கு வாதிகள் வராததால் தள்ளுபடி செய்யப்பட்டு அந்த வழக்கை மீண்டும் கோப்பிற்கு கொண்டுவர மனு இந்த நீதிமன்றத்தில் மறுபடியும் தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். மேற்படி மனு இந்நீதிமன்றத்தில் மனு எண். 01/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 06.11.2025 அன்று வழக்கு விசாரணைக்கு வருகிறது என்றால் சரிதான். பொன்னேரி சார்பு நீதிமன்றத்தின் வழக்கு எண். 104/1998 ல் வாதிகள் அடிமனை வாதிகளுக்கு சொந்தம் என்ற அடிப்படையில் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். 2007 ம் ஆண்டு இவ்வழக்கை தாக்கல் செய்தபோது முன்வழக்குகளை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. என்னுடைய வழக்கறிஞர் தகவலறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் மனுசெய்து மாதவரம் வட்டாச்சியர் அளித்த விவரக்கடிதம் வா.சா.ஆ11 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ11 ல் சர்வே எண்.173/1 ல் 193 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு 121 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்சொன்ன 121 நபர்களில் E.சுலோச்சனா அம்மாள் அவர்களும் அடங்குவர் என்பதனை என்னால் மறுக்க முடியுமா என்றால் எனக்கு அது குறித்து தெரியாது.

8. இவ்வழக்கை எந்த தேதியில் நடந்த சம்பவத்தின் அடிப்படையில் தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு அது குறித்து தற்போது ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் வாதுரையில் நான் 24.09.2007 ல் நான் கையெழுத்திட்டதாக உள்ளது என்றால் சரிதான். வழக்குரையின் ஆவணப்பட்டியலில் 12.10.2007 என தேதியிட்ட ஆவணம் உள்ளது என்றால் சரிதான். எதன் அடிப்படையில் 12.10.2007 என தேதியிட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு அது குறித்து ஞாபகம் இல்லை.

9. வழக்கு சொத்து உள்ள கட்டிடத்தில் தையல் கடை வைத்துள்ளேன் அங்கு நான் குடியிருக்கவில்லை என்றால் கடைக்கு பின்புறம் என்னுடைய வீடு அமைந்துள்ளது. அந்த

இடத்தில் நான் குடியிருக்கவில்லை வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பிரதிவாதிகள் சுவாதீனம் பெற வழக்கு தொடர்ந்துள்ள நிலையில் நிரந்தர தடை உத்தரவு மட்டும் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் பெற வழக்கு தொடர்ந்துள்ள நிலையில் 2007 ம் ஆண்டில் வாதிகளின் சுவாதீனத்தில் தலையீடு செய்ய எந்தவிதமான முகாந்திரமோ அல்லது தேவையோ இல்லை என்றால் சரியல்ல.

10. இவ்வழக்கிற்கு உண்மையான வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. முன்வழக்கு விவரங்கள் எல்லாம் மறைத்து தவறாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாத்தாங்காடு கிராம செட்டி தெருவை ஒட்டியுள்ள வேறு பகுதியில் அனுபவத்தில் இருந்த வந்த நான் பிரதிவாதிகளின் குடும்ப மனையில் ஆக்கிரமிப்பு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் என்னுடைய முன்னோர்கள் காலத்தில் இருந்து இருந்து வருகிறோம் என்று வாதுரையில் சொல்லியிருந்தாலும் அவ்வாறான முன்னோர்களின் பெயர்கள் விவரம் மற்றும் எந்த வருடத்திலிருந்து அனுபவத்திலிருந்து வருகிறார் என்ற விவரத்தை கூறவில்லை என்றால் சரிதான். எனவே, இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிந்தது)

விசாரணை முடியும்:- **05.40 PM**